सू— एन्नङ्गाणुं पेक्कोण्डनायका! वाडी नाङ्गळ् भागवताळ्-वन्दु केट्टदे नीर् कोपिच्चुकोळ्वानेन्। बिळ्ळाय् यङ्गळै इप्पडि वैवानेन् बिळ्ळाय् उम्मुडै(य) पेर् एन्न शोल्लुङ्गाणुं।

कट्टिकै— आहां! नम्मुडै(य) पेरा! नम्मुडै(य) पेरा! [1]मुन्नदा(य) केक्कप्पडादु नम्मुडै(य)पेर् बलवर्दण्डन् द्राविडदेशाधीश्वरनुडैय कन्यकामणियान कम्भिकै कान्तिमदि अम्माळ् श्रिंगारवनत्तुक्कु वाराळ्। आनपडियनाले अदर्क्कु नान् मुन्ने वन्दु श्रिंगार-वनमेल्लां मुस्तोपु पण्णच्चोन्नाळ्। अदनाले नान् मुन्ने वन्देन्।

सू— महानल्लदाच्चु अन्दप्पडिये मुस्तोपुप्पण्णरोम्। नी पोय् कान्तिमदियै अळैच्चुक्कोण्डु वारुं बिळ्ळाय् ॥

---

१ मुंनेतोंकेकवंणादु।

कट्टिकै — नल्लदुदां अऴैच्चुक्कोण्डु वारोम् ॥

सू — इन्दप्पडिक्कि कट्टिकैक्कारन् वन्दु हेच्चरिच्च तदनन्तरत्तिले (द्राविडदेशाधीश्वरनुडैय-कन्निकै कान्तिमदि धर्मपुत्तिररुडैय राजसूययागत्तिले कृष्णस्वामियैपात्तु मोहिच्चु विरह-वेदनैनाले सखियुडने श्रिंगारवनत्तुक्कु वरुगिरमार्गं पराकु) ॥

சூத்திர :—ஓஹோயி! ஆரங்காணும்? பாகவதாள்! விக்னேசர் வந்து அநேகப் பொழுதாச்சே! பூசைப் பண்ணுவதற்கு அர்ச்சகனை அழையுங்கோள்.

பதில் :—நல்லது அழைக்கிறோம். அடே! ஆர் பிள்ளே பூசாரீ! விக்னேச்வரர் வந்து எததனைப்பொழுதாச்சு. இத்தனைப்பொழுது பூசை பண்ணுமல் கோவில் படித்தன உலுப்பையைக்கொண்டு இராத்திரிப் பகலாய் தாசி வீட்டிலேயே கிடக்கிருய். நல்லதாச்சு. இனிமேல் இந்தப்படிதரகு எத்தனை நாள்! இந்த உத்தியோகம் இருக்கப்போறது? நீயானுல் இந்தப்படி தாசிபுத்திரனுய் திரியப்போருய்! துரையும் ஒருக்கால் இந்த வழியே வராதே போராரா! அப்போ எல்லாம் வழியாறது. சீக்கிரமாய் பூசையைப்பண்ணு.

பூசாரி வசனம் :—என்னங்காணும் விருதா என்மேல் கார்பாரம் பண்றே! நா வந்தாலாச்சா; பரிசாரகன் வரவேணும், நட ஒத்துக்காரன் வரவேணும், தேவடியா, மேளக்காரன் வரவேணும், மெய்க்காவல்காரன் வரவேணும், இவாளெல்லாம் வந்து பூசை ஆகவேணும். நாமாத்திரம் வந்து என்ன செய்யவேணும்.

சூத்திர :—நல்லது அவாளெல்லாம் அழைக்கிறேன். நீ ஸ்நானத்தைப் பண்ணு. அடே! பரிசாரகா சீக்கிரமாய் பண்ணுதற்கு யெத்தனம்பண்ணு.

பரிசாரகன் :—அய்யா! இதோ சகல சாமக்கிரியும் முஸ்த்தோதா இருக்குது பூசைபண்ணச் சொல்லும்.

(அர்ச்சகன் விக்னேச்வரர்க்கு பூஜை செய்கிருர்.)

அய்யா! பூசையாச்சு வீட்டுக்குப் போரோம்.

சூத்திர :—இந்தப்படி நாட்யாரம்பம் பண்ணின ததநந்தரத்திலே பஞ்சபாஷாவிலாச நாடகத்திலே விக்னேச்வரர்வந்து சகல விக்கினங்களும் நிவாரணம் பண்ணின ததநந்தரத்திலே கதா சம்விதானம் எப்படியென்ருல் திராவிட தேசாதீச்வரனுடைய கன்யகாமணி சிருங்கார வனத்துக்கு வருகிருளென்று பலோர்த் தண்டனென்கிற கட்டியக்காரன் எச்சரிக்கைப் பண்ணிக்கொண்டு வருகிற மார்க்கம் பராக்கு.

தருவு: இராகம்-ரேவகுப்தி அடதாளம்

பலோர்த்தண்டன் வருகிருன்—பராபரி செய்யவே (பலோ)

குலுக்கிக்கொண்டு மினிக்கிக்கொண்டு
கோலு கையிலே பிடிச்சிக்கொண்டு (பலோ)

பட்டை நாம மிட்டுக்கொண்டு
பல்லு வெளியேக் காட்டிக்கொண்டு
பட்டு துப்பட்டி கட்டிக்கொண்டு
கட்டி மீசை முருக்கிக்கொண்டு (பராபரி)

சூத்திர:—கேளுமய்யா பாகவதர்களே! நாம் ஹரிகீர்த்தனம் பண்ணுகிற விடத்திலே இவன் யாரோ தெரியாது விகடாகாரமாய் வந்து நிற்கிருன். இவன் யார்? என்று சொல்லிக் கேளுங்கோள்.

பதில்:—நல்ல பாக்கியம்! அப்படித்தானே கேழ்ப்போம்! ஓஹோ நாயிகா! வாடீ! ஆரங்காணும் பிள்ளாய் நீர்? எங்கிருந்து வருகிருய்! உன் பேரென்ன? ஊரென்ன? சொல்லும் பிள்ளாய்!

கட்டியக்காரன் வசனம்:—என்ன! என்னத்துக்குடா தகரார்பண்றீர்கள். கூட்டங்கூடிப் பாப்பார்ப் பொடிமகள். என்னை கேக்கரதுக்கு நீங்கள் யார்! கூத்தி மகள்.

சூத்திர:—என்னங்காணும்! பேய்க்கொண்ட நாயக்கா! வாடீ! நாங்கள் பாகவதாள்! வந்துக் கேட்டதே உண்டானல் நீர் கோபிச்சுக்கொள்வானேன்? எங்களை இப்படி வைவானேன்? உன்னுடைய பெயரென்னச் சொல்லும் பிள்ளாய்!

விரிகதி ரோன்சுழ லிமகிரி யின்றவள் வெங்கோ பந்தீர
    விரிதலை போம்படி முனிதலை வேண்டி விருந்தாய் வந்தாரும்
வரிவளை யேந்திபு மிமையவர் வேந்தனும் நின்றூர் கண்டாரு
    மடிபிண மாம்படி பொருத பிரான்றிரு மைந்தா பண்பாடி
யரியின முன்றெழு குழல்வெதிர் காண்பவர் நெஞ்சோ டுங்கூட
    வலிகமழ் வாங்கொரு சிறுகிடை நோம்படி பந்தோ டன்பாயத்
தெரிவையர் தாம்பயில் புகலிய ராண்டகை! செங்கோ செங்கீரை!
    செருவினி லென்றெழு மருகர் குலாந்தக! செங்கோ செங்கீரை! (9)

வருபகை யேங்கிட வொருபகல் வாங்கிய சங்கா ளும்பாணி
    வடகிரி சூழ்கதலை கடைகயி ரும்பணி வங்கா லங்காலம்
வருள்புதல் காண்கிலம் வழிபடி யோம்பர மென்றே வந்தார்கள்
    அமுதுண வாங்கெதிர் விடனுகர் வான்றிரு மைந்தா பண்போதி
லிருசிலை தேங்கமழ் ஒநசிலை தாங்கொடு நின்றூர் வென்றேறு
    மிருசுணை பூங்கணை யிவையிவை வாங்கி யெதிர்ந்தார் நெஞ்சோடும்
தெருவமர் பூண்டெழு புகலிய ராண்டகை! செங்கோ செங்கீரை!
    செருவினி லென்றெழு மருகர் குலாந்தக! செங்கோ செங்கீரை! (10)

3. தாலப்பருவம்

இனிதாகக் கமலப்பூ மேதித்தி ரள்மீ
    திளவாழைத் திரள்சீர் [1]வொருவெண் கரைசூழ
கனிவாழைப் புதல்சாடா வோடரவூர் புகுதும்
    கதிர்மாடம் பயில்காழிக் கதிர் [2]செவ்வான் மதிதோய்
பனிவாசப் பொழில்சூழத் திகழ்கூடற் சமணப்
    பசுவெண்ணெ யிரம்வந்துட் படுதொழுவத் திடையே
தனிஞானப் புலிபொப்பாய்! தாலோ தாலேலோ!
    சம்பந்தப் பெருமானே! தாலோ தாலேலோ! (1)

விண்டரவத் திவலைத்தெண் டிரைவீசுங் கடல்வாய்
    விடுகற்றூண் மிதவைக்கே விடுபுற்பா யுடையார்
திண்டாடக் கரையேறுந் தமிழைத்தந் தருளுந்
    திருநாவுக் கரையன்றன் சித்தத்தின் றுணையே
வண்டானத் தெழுகொல்லிப் பண்பாடச் [3]சிறைதோய்
    மண்ணூரப் புனலூடே மலரும்புண் டரிகத்
தண்டாமத் திருமார்பா! தாலோ தாலேலோ!
    சம்பந்தப் பெருமானே! தாலோ தாலேலோ! (2)

---

1. "வொருவெண்கரை" என்றுளது. 2. பரவானம். 3. சிலமாபாய்.

வாராமே யறிவைப்போ கெனவிட்டுப் புவியோர்
வஞ்சப்புன் சமயத்தே மதிகெட்டுத் திரியப்
பாராமே [4] யிதுவின்றித் திகிரிக்கோன் மயப்
பணிசெய்யப் பழகாமே பழுதாகா மறைநூல்
சோராமே யடிசூடுந் தொண்டற்கோர் துயரம்
சூழாமே தமிழ்மாரன் துயர்பட்டுச் சமணைச்
சாராமே முலையுண்டாய்! தாலோ தாலேலோ!
சம்பந்தப் பெருமானே! தாலோ தாலேலோ! (3)

உருவைப்புற் புடமிட்டுப் பொதியக்கற் றமணே
உலவைக்கற் றுறியிற்புக் குணுமொட்டைச் சமணக்
கருவைக்கொத் தினைநட்டுத் தலமுட்டப் பயில்பர
கழுவித்தைத் தெமையாளுங் காழிக்கற் பகமே!
திருவுக்குப் படியொக்கத் திகழ்சித்திரப் பிடியைத்
திசையெட்டும் புகழப்பொற் குடமிட்டுத் திரியத்
தருவிக்கத் [5] தமிழ்கற்றாய்! தாலோ தாலேலோ!
சம்பந்தப் பெருமானே! தாலோ தாலேலோ! (4)

[6] அமிழ்தாளும் படிதேவர் கலைநீரைக் கடைஞ
ளரிகாணப் பெருவேகத் தடஞகைப் பகுவாய்
யுமிழ்கோபந் தருகோபத் தாலாலந் தனையன்
றுண்டானைப் பிரியாவாழ் வுடையாள்மா மகனே!
[7] குமிழாருங் கரைவாரிக் கொணர்வைகைப் புனலிற்
குணபாகத் திடுமேடக் குடபாகத் தெதிரத்
தமிழ்பாடுந் திருவாயாய்! தாலோ தாலேலோ!
சம்பந்தப் பெருமானே! தாலோ தாலேலோ! (5)

(வேறு)

சதவிதழ்மு கட்டிலெழு சதுமறைத ரிப்பதொரு
தலைவனெனும் மெய்ப்புனித! தாலேலோ!
தரமிலிப வுத்தனொரு [8] தலமதித லத்தினிடை
தளரவிழி வைத்தமுனி! தாலேலோ!
அதிமதுர முத்தமிழி னடைவுதெரி யத்தெரிய
வமுதழுது நிற்குமிறை! தாலேலோ!
[9] அடல்படுதி சைச்செவியில் அமணர்குல சத்துருவென்
றறையும்விரு துக்கதிப! தாலேலோ!

---

4 யதுவன்றி என்றுளது. 5 தமிழ்பெற்றாய் என்றுளது. 6. அமிழ்தாகும்.
7. குமிழாரந். 8. தலமதில் தலத்தினொடு. 9. அடைபடு.

[10] மதகினடி குத்துவன வலைகுலைய மொத்துவன
வழையடவி தத்துவன வாளோடா
லழியவெதிர் வேட்டுவன் [11] வலைகிழிய முட்டுவன
மலர்நிழலை யொட்டுவன வொரோர்சேல்
கதமிகு களிற்றின மெனநிறை தடத்துலவு
கழுமலந கர்க்பதிப! தாலேலோ!
கருதறிய [12] முத்தமிழின் நெறிமுறை வளர்க்கவரு
கவுணியகு லக்குரிசில்! தாலேலோ! (6)

[13] படைவணிக னச்சிவிடு பணியெயிறு நக்கவிழு
படுகொலையி னைத்தெரிவை [14] பாராமுன்
பதுமவிழி யுக்கபுனல் பரவையின லக்கவவள்
படுதுயர்தி ருக்கண்மலர் காணுமால்
விடைபெறவெ டுத்தகொடி மருகலுறை யுத்தமனூர்
விரகொடுதி ருப்பதிகம் நேர்கூற
விடமதுக டித்தவழி யிழியவரு ளிப்புவியின்
மிகுபுகழ்ப ரப்புமுனி! தாலேலோ!
மடைதொரு முகிழ்த்தமதி யெனமணி குவித்தவரி
வளையொலிப்ப வதனோர் பாலே
மலர்பலவெ டுத்தகனி குழியவதி லுக்கபுனல்
மதகினை வொலிப்ப வதனடுவே
கடைசியர்ம லர்க்கைவளை கலனென வொலிப்பநிரை
கழுமல நகர்க்கதிப! தாலேலோ!
கருதரிய முத்தமிழின் நெறிமுறைவ ளர்க்கவரு
கவுணியர்கு லக்குரிசில்! தாலேலோ! (7)

அருகுழுது விட்டவர்கள் அடைய நு கர்க்கனியை
அடிதொருநி ரப்புவன தேமாவா
னகமிருள் மொய்த்தபொழில் அலர்மது வையுய்த்த
திசையழகி னெடுசுட்டுவன தேனீமெய்
குருகுவொரு வக்கமல மடுவினையி னத்துவரு
[15] குலனுடன் உழக்குவன நீர்வாய்
[16] கொடியவுணர் கற்கரசர் குழிவழிபு துக்குவன
கொழுவணிக லப்பையத னோர்பாலே

---

10. மதகினிடை குத்துவன வளையடவி மொத்துவன. 11. வலைகிழிய முட்டுவன வாளோடான் மறியவெதிர். 12. முத்தமழின். 13. படைவாவினச்சிவிடு, 14. பாராமே. 15. குலமுடன். 16. கொடியவூர் கற்கரசு.

பெருகுவய லிற்புகுது [17]மதகினைய முக்கினிது
பிரியுமணை கட்டுவன [18]சேதர்வாழ்
பெருமைதரு நற்பழன மழகு வு கத்தொடுக
முயருமென நிற்பதொரு பேராலே
கருதியதி ரைப்பரவை யுலகினைவி ளக்கவரு
கழுமலநகர்க்கதிப ! தாலேலோ !
கருதரிய முத்தமிழி நெறிமுறைறவ ளர்க்கவரு
கவுணியர்கு லக்குரிசில் ! தாலேலோ ! (8)

மதுரகவி தைக்கடலில் வருபொருணர் மரக்கலநல்
வழிவிடுவ னப்புடைய மீகாமா !
மறிகடல டைத்தவனு மறைவனும திப்பரிய
மணியிணைம தித்தருள்வி யாபாரா !
அதிரகலி புறச்சமய முதுகளைய றுத்துரிய
வருசமய வித்துவிளை வேளாளா !
அதிமதுர சத்தவலை மதுரையிலொ ழுக்குமிடை
யமணமிறு கமறுத்துவ ருகாருணா !
முதிருவட வைக்கனலின் முருகுதரு கட்பணியின்
முதுகு [19]கிழி யப்பலவின் வேர்வாய்வீழ
முதுபழமெ டுத்தவழி யுரகபண பத்திநிரை
முழுமணியெ ரித்தவெயில வர்மாலூர !
கதிரவனி லெட்டுமடி யொளிபெருக வெற்றிபுனை
கழுமலநகர்க்கதிப ! தாலேலோ !
கருதரிய முத்தமிழி நெறிமுறைறவ ளர்க்கவரு
கவுணியர்கு லக்குரிசில் ! தாலேலோ ! (9)

இனமொடுப றித்ததலை யருகரிக ழுத்திகழு
மெரியினிடை யிட்டவுரை [20]தோலாமே
யிருகரையொ துக்கியொரு குலகிரியெ டுக்குநதி
யிடையிடுத மிழ்ப்பனுவல் போகாமே,
சினமிகவ டர்த்தபடை வழுதியுட [21]லுக்கும்வகை
திரியவிடு வெப்பிலவன் [22]வேவாமே,
சிவனிடமி ருக்குமுமை திருமுலைசு ரக்க [23]வரு
திருவருள்ப டைத்தமுனி ! தாலேலோ !

---

17. மதகினை முழக்கினிது. 18. போதர்வாழ். 19. குனிய 20. தோராமே. 21. லுட்கும், 22. மாயாமே. 23. வளர்திருவருள்.

முனைமுனைய றுத்துழவ ரிடவிட்டு [24]வ டுக்குமரி
முறைமுறைகு வித்தபல சூடார்போர்
முகில்படுமு கட்டினிடை முழுகவிர தத்தினுடன்
முதன்மைதரு பச்சைவயல் மாவாலே
கனகவரை சுற்றிவரு கதிரிரவி கடகவளர்
கழுமலந கர்க்கதிப ! தாலேலோ !
கருதறிய முத்தமிழி நெறிமுறைறவ ளர்க்கவரு
கவுணியர்கு லக்குரிசில் தாலேலோ ! (10)

சப்பாணிப் பருவம்

பொங்குதே னொழுகவிடு சண்பகா டவிதழுவு
பொய்கைசூழ் புகலிநகரிற்
புனிதவா ணகையுதவு குமுதவா யமுதவிதழ்
பொழியுஞா னத்தமிழினல்
வங்கமார் கடல்பொதியு மெண்டிசா முகச்சிகர
மந்தமால்வரை தழுவுபூமகளை
வாழ்வித்து ரியமறையை வாழ்வித்த தெமையும்
வாழ்வித்த நாயகன்மிசை
கங்கைநா யகனிமைய மங்கைநா யகனிலகு
கயிலைநா யகனடுபடைக்
காளிநா யகன்வலிய கூளிநா யகனிருவர்
கருதுநா யகன் [25] மறைவலோர்
தங்கணா யகன்மதலை சண்பைநா யகனினிது
சப்பாணி கொட்டியருளே !
[26] தலவலைய [27]முழுதும்வா ரொலிவளர அழுதமுனி !
சப்பாணி கொட்டியருளே ! (1)

துங்க [28] மத கிற்கிளைஞர் துன்றுகுடி லிற்புரிசை
[29] சூழுமகளிர் படுகையிற்
சுழிதரு குரம்பின்மலர் பொழிதரு வரம்பிலளி
[30] சூழ்தரு கரும்பின் [31] முதலைப்
பொங்குமு ழையிற் [32] புதிய ஞெண்டின்வளை யிற்குவளை
[33] புவலுமல ரோடையில்நறும்

24. வடுக்குமவர். 25. மறுவிலோர். 26. தலைவலை. 27. முழுமாலொலிவளர.
28. மதகிற்களமாதுன்று குடிலிற். 29. சூடு 30. சுழல்தரு 31. முதலிற்.
32. புரியு. 33. புலகு.

புகக்கிடங்கி லரிதாளிற் பாம்பிலிடு போரிற்
களங்களில் விடா
மங்கல மலர்ப்படணையில் வண்டெழு குளக்கரையில்
மஞ்சளிடு பத்தி களின்கீழ்
வாழைய [34] டரிற்பெரிய தாழைய டியிற்களிகொள்
மாவினிழலிற் பொருகடற்
சங்குசொரி முத்திலகு சண்பைநக ருக்கதிப!
சப்பாணி கொட்டியருளே!
தலவலைய முழுதும்வா ரொலிவளர அழுதமுனி!
சப்பாணி கொட்டியருளே! (2)

அருவிமுக் கடமுடைய தலைகைசுற் றறியபடை
யறுபதத் திருவுடைய
தோரடர் திசைபடர வருவதடர் பொருப்பொடு
பொருவதற விருட்டிய
வுருவுதர வொருகரக் [35] கொலைகடிய துலகடிக்கிய
வடியதுடு முழக்கிய
முடியதா ருயிருருக்கிய விழிய தூரியசெய்த
பலியுழலு மொருவர் மெய்ப் புதல்வ வொளிசூழ்
மருமல ரக்கமுக டவிகத லிகைச்செறி
யடவிவளரு மொய்த்தடா டவிதேன்
மலிசுளைப்பல வடவிய கருவிட்டெழு மடவி
மதுமலற் [36] குரவடவி நீள்தரு
நெருக்கிய வடவிதழுவு கொச்சையர் தலைவ!
சப்பாணி கொட்டியருளே!
தலவலைய முழுதும்வா ரொலிவளர அழுதமுனி!
சப்பாணி கொட்டியருளே! (3)

நோமதற் கும்பெருக நொந்தார் களாயொன்றை
நோவாமல் செய்ய நினைவார்
நோயுடம் பானபுற் பாயுடன் பாழாக
நுண்மயிர் பறிக்கை தவிரா
மாமறைப் பேயமணர் கழுமேல் கொளப்புத்தன்
வன்சிர முருட்டி யருள்சேர்
மன்னுதிரு முத்தணி மணிப் [37] பந்தல் மிசைநின்ற
மறையிளங் களிறு மழைதோய்

34. அடியிற். 35. குலைகடி.
36. தரவடவி. 37. பந்தமிசை நின்ற மழவிளங்களிறு.

காமலர்த் தேனுண்டு மதுகரம் பெடையுடன்
காமரம் பாட வருகே
கலபமயில் நடமாட முருகுகமழ் சென்னலங்
கவரி பல வீச வண்ணத்
தாமரைச் சிங்காதனத் தேறு புகலிமுனி!
சப்பாணி கொட்டியருளே!
தலவலைய முழுதும்வா ரொலிவளர அழுதமுனி!
சப்பாணி கொட்டியருளே! (4)

கொலைபயிலும் வச்சிரக் கையிந்தி ராதிதேவர்
தந்தலை மாலையிட்டு மகரக்
குழைகட லுடுத்தபடி பின்றிவரு பன்றிவெண்
கோடது புனைந்து முடிமேல்
[38] நிலைமைதரு கங்கா நதிப்பெருந் திரையுட
னெருக்கினை முடித்து ழலுவாய்
நீடிய பணமகுட மாசுணம் வளைத்ததொரு
நிறைநா ணணிந்து [39] மதுரக்
கலைமகளும் மலர்மகளும் மண்மகளு மடிபரவு
கனகமலை யரையன் மகளைக்
கமல [40] மதி னுடமால்புகுந் தேவல்பல செய்யக்
கைபிடித் தருளு முரிமைத்
தலைமகளை யொருதிருத் தாதையென வுடையமுனி!
சப்பாணி கொட்டியருளே!
தலவலைய முழுதும்வா ரொலிவளர அழுதமுனி!
சப்பாணி கொட்டி யருளே! (5)

(வேறு)

உலவுசெஞ் சுடரி ரவிரத வலம்புரி
கிரியிலொற்றிய கயற்கோன் விடா
துடல்வளைந் ததுகிமிர வடவிலங் கலினுழுவை
புற்றெழுது பொற்றே ளிஞன்
யிலகு [41] சண் பையர்முதல்வி யுலகின் மங்கயர
ரசியொக் கலையின் மெய்க் கூடல்வாய்
இகலியன் றமண்முடுகு சகலபண் டிதமிசைய
யெட்டிய தலைப்பூகமா
மலரின்வந் துலவுதரு பிரமன்முன் [42] பரவிவர
விட்டபல நெட்டே ணி யேர்மலை

38. நிலைமை, 39. மகரக் 40. மகனுடன.
41. சண்பையர் முதல்வி 42. பாவ வரவிட்ட பல நெட்டோணி.

பிடுங்கிய பொழுதுசிவன் விசும்புகட் கையநட்ட
வயிரக் கால்களேர்
குலவுமிங் கிவைகளென நிலவுசண் பையர்தலைவ!
கொட்டியருள் சப்பாணியே!
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய!
கொட்டியருள் சப்பாணியே! (6)

கடியவெம் பிறவிதரு கடல் விழுந் தலறுமவர்
[43] பற்றவரு நற்றோணியே!
கலியமிழ்ந் திட விலகு கருணையம் புனலது
பரப்பிய சாக்காலமே!
அடிபணிந் தெழுமவர் தம்மிடி கெடும்படி
யருளளப்பதொரு கொட்டாரமே!
யறம் [44] விரும்பி மையமயி லரனுடன் படவினிது
பெற்றதொரு கைக்காணியே!
நெடியவன் சமணிவுளி நிறைபிணம் படவுழரி
நிற்பதொரு புத்தானையே!
நிலையுடன் றெரியுமிய லிசையெனும் பயிர் [45] விளைய
வித்துவிளை பொற்பூமியே!
கொடிய குண்டர்கள் செவிடுபட மகிழ்ந்திருகை
கொட்டியருள் சப்பாணியே!
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய!
கொட்டியருள் சப்பாணியே! (7)

நிமிருமங் கொடுமுடிக ளொடியவெங் கரிகரடி
நிற்குநிலை கெட்டோடவே
நெடியசந் தகில்பறிய மணிமுகந் திருகரையின்
நெற்றிபல செற்றோடிமுள
தமரமெங் கணுமுலவு நிலவு பைங்கமுகு கமுகில்
தட்டிவரு கோட்டாறுசூழ்
தழுவுசண் பையர்தலைவ! வெழுதுசெந் தமிழ்விரக!
கொட்டியருள் சப்பாணியே!
யமரரஞ் சலிபரவு சரணபங்கய முனிவரற்
புதகலிக கோபனீடரசு
குண்டிகை யருகர்குல பயங்கர வசுரர்
பொடிபடக் கோபமுள

43. பற்றிவரு 44. விரும்பிய வளமை யவனுடன். 45. முடிய வித்தம் விளை

குமரரன் புறுதுணைவ! [46] வெழுதுசெந் தமிழ்விரக!
கொட்டியருள் சப்பாணியே!
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய!
கொட்டியருள் சப்பாணியே! (8)

அறுபதந் திகழ்குமுத விதழ்திறந் தழுதழுது
துய்த்தது முலைப் பாலைவான்
அமரருஞ் சதுமறையு முனிவருந் தொழவினிது
பெற்றது திருத்தாளம் வாய்
முறுகுசெந் தழலினிடை தளிர்நிறம் பெறவெழுதி
விட்டது தமிழ்க் கோவை வான்
முறுவலென் புகள் பொதிவதொரு குடங் கொடுவர
வழைத்தது மலர்ப் பாவைகார்
செறிவிசும் புழுதபொழில் மிழலையம் பதியர
ணளித்தது படிக்காசு சூழ்
திருவிளங் கியமருகல் மருவுசெஞ் சடையாரோடு
கற்றதுவிடத் தீர்வையார்
குறுகுநின் பெருமைசொல் வேனுநிலம் பரவுமுனி!
கொட்டியருள் சப்பாணியே!
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய!
கொட்டியருள் சப்பாணியே! (9)

கழுமலந் திருவதிகை திருவலம் புரிமருகல்
கற்குடி திருக்கோவலூர்
களர்பிரம் பியமயிலை சிவபுரங் கடைமுடி
கருக்குடி திருக்கோடிகா
மிழலைவண் டுறைபருதி நியமம்வண் குடிசுழியல்
வக்கரை யளப்பூர்
விளமர் கொங்கண மிடைவைதிரு வலஞ்சுழி
திருவாத்துறை திருச்சேய்ஞலூர்
பழனமம்பல மதுரை வளைகுளங் கொடுமுடி
யருட்டுறை திருப்பூவனூர்
பறியல் தண்டலை கயிலை வலிவலஞ் சிறுகுடி
பருப்பத மறைக்காடுசேர்
குழகர்தங் கழல்பரவ வுரியசெந் தமிழ்விரக!
கொட்டியருள் சப்பாணியே!

---

46. வரவெனும் பனிவலவ.

குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய!
கொட்டியருள் சப்பாணியே! 10

5. முத்தப் பருவம்

அலையுண் டமரர் விடம்பற்றி ஆடுஞ் சுடிகைப் பணமகுடத்
தடல்வா ளரவத் தனிகோபித் தழலா யிரவர் வாயங்காப்ப
நிலையுண் டெனவே யுலகடக்கி நிற்குங் கனகக் கிரிதிருப்பி
நீலப் பரவை கடைந்தனுள் நெடுவா[47] சவனும் வானவரு
மலையுண் டுவரிக் கடலுண்டு மண்ணுண் டவனும் [48]விண்ணுண்டு
மாளா வண்ணம் விடமுண்ட மணவாளன்றன் [49]மனையாட்டி
முலையுண் டமுத கனிவாயான் முத்தந் தருக முத்தமே!
முத்தின் பந்த ருடையபிரான் முத்தந் தருக முத்தமே! 1

வழியுங் கரையிற் கழைமுத்தும் மணியுங் கொழித்துச் சுழித்துவரும்
மானீ ராசில் வடகரைவாய் மண்ணு டாள விண்ணுட்டின்
றிழியுங் கோயில் மகிழ்ந்திருந்த மிழலைப் பெருமான் றிருவருளா
லிலகும் படிக்கா சினிதுபெறும் [50]யிசையா கரனே இசைதாவிப்
பொழியுந் தரங்கக் கடலாடைப் புவியோரடங்காப் பரசமயப்
பொய்க்கே விழுந்து பொரிகலங்கிப் போகா வண்ணம் தமிழ்மாலை
மொழியும் பவளக் கனிவாயான் முத்தந் தருக முத்தமே!
முத்தின் பந்த ருடையபிரான் முத்தந் தருக முத்தமே! 2

எருக்கே புனலே கடிக்கொன்றை யிணரே யறவே யிளம்பிறையே
யிவையே முடிக்குஞ் சடாமகுடப் பெருமா னுலகுக் கினிதளித்த
தருக்கே தெய்வத் தமிழ்க்கொழுந்தே [51]தமிழ்நான் மறையின் கிழங்கேபுன்[52]
சமயப் பரிமோ கரமுழக்குந் தனிவா ரணமே திருஞானப்
பெருக்கே யடியார் பெற்றபெரும் பேறே நாறுங் குமுதமே
பேணுந் தொண்டைச் செங்கனியே பீடார் சோதிப் பவளமே
முருக்கே யனைய கனிவாயான் முத்தந் தருக முத்தமே!
முத்தின் பந்த ருடையபிரான் முத்தந் தருக முத்தமே! 3

கொத்துப் படுநாண் மலர்க்கூடை குஞ்சி யாக மஞ்சனநீர்
கொள்ளும் கலசம் வாயாக மெல்லு மிறைச்சி யமுதாகச்
சித்தத் தெழுந்த பேரன்பாற் சிலைக்கை வேடன் பணிசெய்யுந்
திருக்கா ளத்தி யிறைவர்பால் செம்பொற் சின்னம் பெற்றோனே

47. வானவரும் 48. மண்ணுண்டு 49. மணவாட்டி 50. யிமையாகரனே
51. தனிநான்மறை 52. புன்சமண

மத்தக் களிற்றுப் பணைமுற்றும் வளவாய் முற்றுங் கழைமுற்றும்
மன்னுஞ் செந்நெற் றரளமுத்தும் கன்னல் முத்தும் நிகரொவ்வா
முத்துப் பவளக் கனிவாயால் முத்தந் தருக முத்தமே!
முத்தின் பந்த ருடையபிரான் முத்தந் தருக முத்தமே! 4

நடிக்கும் பெருமாள் பணியாலே நாபிக் கமலத் தொருமுனிவன்
நாட்டுங் [53]குழியிற் கயலொதுங்க நாமப் புலிவைத் தொருசெண்டால்
அடிக்கும் பெருமாள் பிரியாத அந்தப் புரத்துக் கழகளித்த
அங்கைக் கமல மங்கையருக் கரசியுடனே யரசோட
இடிக்கும் பெருமாள் மதயானை வழுதிக் [54]கினிய மந்திர நூல்
எண்ணுந் தலைமைக் குலச்சிறையார் நெடுநா ளெண்ணு மெண்ணமெலாம்
முடிக்கும் பெருமாள் சம்பந்தப் பெருமாள் முத்தந் தருகவே!
முத்தின் பந்த ருடையபிரான் முத்தந் தருக முத்தமே! 5

(வேறு)

பிணமுடைச்செஞ் சுடலைநட்டம் பயில்விருப்பம் பெருகவோர்
பிறைமுடிக்கும் பரமர்பக்கம் பெரிதுவக்குந் தலைமைசேர்
மணமிகுக்கும் குழலிசெப்பின் திருமுலைக்கண் பெருகுபால்
மருவியித்தெண் டிரைவிளைக்கும் புலிவளர்க்கும் குழவிபே
ருணவுதந்தந் தவமெனக்கொண் டுயிருருக்குண் டிகையினே
டுடல்பதைத்துங் கெதிர்வரக்கண் டவருவட்டும் பரிசுசேர்
[55]சமணரைக்குண் டரையுழக்குந் தலைவமுத்தந் தருகவே!
தமிழ்வளர்க்கும் புகலியத்தன் தருகமுத்தந் தருகவே! 6

புளகமெய்த்தொண் டினர்பிறக்கும் பிறவியச்சந் தளரவோர்
புனல்விழித்தண் டலைபறிக்கும் பொறியில்சுற்றந் தளரவே
யளவறுக்கும் பெருநதிச்சென் றகலவெற்புந் தளரவே
யானைவிட்டங் [56]கரிமயக்குண் டமிழ்வழக்குந் தளரமேல்
விளையநிற்குந் தவமில்பொய்ப்புன் சமையமுற்றுந் தளரமுள்
வினைபடைக்குங் கலியிடுக்கண் பெருகுவெப்புந் தளரவோர்
தளர்நடைக்கிண் கிணியரைச்செங் குழவிமுத்தந் தருகவே!
தமிழ்வளர்க்கும் புகலியத்தன் தருகமுத்தந் தருகவே! 7

உவமைமுற்றும் பவளமொய்க்குந் திருவுருக்கொண் டவனும்வே
றுருவுபச்சென் றனிடப்பங் குரிமையிற்கொண் டவளும்நீ

---

53. இரியிற் கயலொதுக்கி 54 குரிய 55. சணவரைக்குண் டெனநினைக்குந்
56. மயக்குண் டமிவழக்குந்

டவலொடப்பந் திருவயிற்றங் கடைசிவைக்குங் களிறுமேல்
அமரர்தஞ்சி ரைவிடுத்தங் கசுரரைக்கொன் றவனுமார்
துவலை மொத்துஞ் சடையருக்கன் புடைய மெய்த்தொண் டினரும்நீள்
சுருதிபற்றுந் திருவிசைப்பண் டிருசெவிக்கொண் டுறுகவோர்
தவமில்புத்தன் றலையுருட்டுந் தலைவமுத்தந் தருகவே!
தமிழ்வளர்க்கும் புகலியத்தன் தருகமுத்தந் தருகவே! 8

வினையுடைப்புன்[57] சமணிருட்டின் றிரள்குலைக்கும் பருதியே
விசையமுற்கொண் டெழும்பவுத்தன் றலைதுணிக்கும் கருவியே
மனதிடைப்பைங் கமலவட்டந் தனிலிருக்கும் பிரசமே
மணிநகைச்செந் துவரிதழ்க்கொண் டணிகொள்முத்தந் தருகவே
எனதிடுக்கண் களையநிற்கும் படியெனக்கன் புடையதாய்
யெனையடற்கும் பகையறுக்கும் படியெனக்கன் புடையமா
தனமெனக்குண் டெனநினைக்குந் தலைவமுத்தந் தருகவே!
தமிழ்வளர்க்கும் புகலியத்தன் தருகமுத்தந் தருகவே! 9

6. வருகைப் பருவம்

தென்றிக் கிலங்கும் மலைத்தமிழின்
செவ்விச் செந்தேன் முகந்தகன்ற
தெய்வப் பொன்னித் திருநதியிற்
செழுநீ ராடி செங்கழுநீ
ரொன்றிச் செந்தா மரையலர்த்தி
யுயருங் கமுகின் நறும்பாளை
யுழக்கிப் பகலின் போதெல்லாம்
அங்கே யுலாவி யுயர்மகர
வென்றிக் [58]கொடிவேள் தனக்கெடுத்த
திங்கட் கவிகைக் [59]கதிர்வீச
வீசிக் குமுதப் பெரும்போதின்
வேரில் மணந்த பசுந்தென்றல்
மன்றிற் புகுந்து விளையாடும்
புகலிப் பெருமாள் வருகவே!
வடநூற் பெருமாள் தமிழ்ப்பெருமான்
மறையின் பெருமாள் வருகவே! 1

சிகரா சலம்போற் சிலையாளி யிருக்குந் தெய்வத் தோணியாத்
திசையாற் றிசையின் முறைமுறையின் ஒலிக்குஞ் சங்கின் சேனையார்

57. பின் சமணிருட்டென்றிருள் துலக்கும் பரிதி 58. கொடிவேளனக்கெடுத்த
59. கதிர் வீசும் வீசும்

புகராப் பகழிப் பூமாரன் றுவசத் தெழுந்த சுரவத்தாற்
பூணார் மணியும் நித்திலமும் வெயிலும் நிலவும் பொழிதலாற்
றுகிராற் கனிவா யின்னமுதுந் துங்கக் கடல்வேல் விழிநஞ்சுஞ்
சொல்லார்க் கமல மதிவதன நல்லாருடனே தோன்றுதலால்
[60]மகரா லயம்போல் மிகவிளங்கும் புகலிப் பெருமாள் வருகவே!
வட நூற் பெருமாள் தமிழ்பெருமாள் மறையின் பெருமாள் வருகவே! **2**

சடங்கின் படியே யயன்புரியச் சக்ரா யுதன்கை நீர்வார்ப்பச்
சந்திரா தித்தர் விளக்கெடுப்ப விந்திரா திபர்கள் தனிபோற்றப்
படங்கொண் டகன்ற நிதம்பதடப் பச்சைப் பிடியைக் கலியாணம்
பண்ணும் பெருமாள் திருச்செவிக்குப் பாடும் பெருமாள் வருகவே!
விடங்கொண் டகன்ற கடைசிவந்து வேலைப் பழித்துச் சேலடர்த்து
வெல்லும் புருவச் சிலைவளைத்து விடுகா தளவுந் தரவடிபோய்
மடங்குங் கண்ணார் நடம்பயிலும் புகலிப் பெருமாள் வருகவே!
வட நூற் பெருமாள் தமிழ்ப்பெருமாள் மறையின் பெருமாள் வருகவே! **3**

பாளைக் கமுகின் மிடறொடியத் தாவிக் கதலிக் குலைசிதறிப்
பாய்ந்து மறித்துப் புனல்புகுந்து பங்கே ருகத்தின் பரியபசுந்
தாளைத் துகைத்து மலருழக்கித் தாதுட் படியுஞ் சுரும்பெழுப்பித்
தாளஞ் சொரியுஞ் சலஞ்சலத்தைத் தள்ளிக் கரையிற் சதகோடி
ஆலைக் கருவிச் சேலினத்தை யடர்த்துத் திசையிற் பதின்காத
மகன்ற மடுவி னிடைமடங்கா தானே கைக்கொண் டஞ்சாது
வாளைக் களிறு விளையாடும் புகலிப் பெருமாள் வருகவே!
வட நூற் பெருமாள் தமிழ்ப்பெருமாள் மறையின் பெருமாள் வருகவே! **4**

படிக்குந் தெய்வத் தமிழ்மதுரைப் பதியிற் கனலைப் புனல்செய்யும்
பச்சைப் பதிக முடையவர்பாற் பச்சை மாலை நச்சரவு
முடிக்கும் பெருமாள் [61]அய்யாற்றின் முத்துக் குடையா வடுதுறையின்
முடியாச் செம்பொற் கிழிபெற்ற முனிவர் பனிவா ரணமொதுங்க
அடிக்கும் புரவி [62]யிரவிசுழன் றண்டம் பொருத கதிர்மாடத்
தாமரை அனையார் கைக்கமலத் தஞ்சொற் கிளிகள் திருப்பதிகம்
வடிக்குங் கனக மறுகுசூழ் புகலிப் பெருமாள் வருகவே!
வட நூற் பெருமாள் தமிழ்ப்பெருமாள் மறையின் பெருமாள் வருகவே! **5**

பரம்பை யடிப்பார் கயல்பிடிப்பார் பாகு சமைப்பார் வட்டமைப்பார்
பாத்தி வகுப்பார் களந்துகிர்ப்பார் பாடி நடுவார் விதையிடுவார்

---

60. மகராசலம் **61.** பணியாற்றின் **62.** சுழண்டம்

குரம்பை யுடைப்பார் மடையுடைப்பார் கூலி கொடுப்பார் போர்படுப்பார்
குமுதங் கொய்வார் கரைசெய்வார் குவளை களைவார் சேறளைவார்
கரும்பு கழிப்பார் பழங்கிழிப்பார் கதிர்ச்சூ டெடுப்பார் கணைதொடுப்பார்
கலப்பை நிறைப்பார் திரைதிரைப்பார் கால்வாய் மறிப்பார்
தாள்பறிப்பார்
வரம்பு குறிப்பா ரொலியடங்காப் புகலிப்பெருமாள் வருகவே!
வடநூற் பெருமாள் தமிழ்ப்பெருமாள் மறையின் பெருமாள் வருகவே! 6

(வேறு)

முருகுகதிரில் விரிமுளரி தருதெரியல் முழுத கனகபுயன் வருகவே
[63]முதலைமறை முதலிகமல மகள்முதலி முனிவர்தவ முதலி வருகவே
அறுகுமல பயனுமரியு மிடவுமையை அணையுமான் மதலை வருகவே
அலையவரு புனலிலன லிலுரையழியுமமணர் வயிறுகரி வருகவே
சிறுகுமிடை யசையவள கமசையவொளி சிதறுதரள வடமசையவார்
திகழுமுலை யசையவுயிர் களசையவிழி சொருகு மகரகுழையசையமா
மருகுதொறு [64]மகளிரசைய வசையவரு புகலி குரிசில் வருகவே!
மலையின்மக ளமுதகலச முலையருவி பழகுதமிழ் விரகன் வருகவே! 7

சுடலையிடமு மிகுசுருதி மறையுமெழு துழனிதரு மலகையின முனிர்சுழலு
முடியுமுடி செருகுமிறையு நிறைதொனியை யதவு தமருக மும்வார்
கடலின்விடமு மிகுமுடைய மிடறுநடை கூடியதொரு தவள விடையுமா
கரியினுரியும் வரியரவு மினிதுடைய கயிலைமலை யின்மகன் வருகவே
உடலையடு பகழிமதன னினிதுபெற வுயிரையவன் மனைவி பெறவிடா
வொளியை யிலகுமுது முளரிவனிதை பெறவுலகை
விழியிணைகள் பெறவருக!
மடலையிளை ஞர்பெற மகளிரழகு பெறப்புகலிக் குரிசில் வருகவே!
மலையின்மக ளமுதகலச முலையருவி பழகுதமிழ் விரகன் வருகவே! 8

இளைய வறுசமைய முருட ருரைசிறுக யிறைவ ருரைபெருக வருகவே
யிகலி யுலகுபொரு கலியின் வலிதளர வியலோ டிசைவளர வருகவே
யளையு மடியவரை யமரர் கிளைவளைய வரச னுடல்நிமிர வருகவே
யழுகு துவருடைய பிடகன் முடிகுறைய வரிய மறைநிறைய வருகவே
விளைய விளைஞிமிறு புதிய [65]விசையின்மொழி விரகி னெடுமூரல் முரலவான்
வெளியு [66]மிருளவிரு ளகல நிழலுலவி விணைசெய விழியிளைஞ
ருயிரெலாம்

63. முதலிமறை 64. மகளிளரகமசையவரு 65. விரை வழியை
66. மிருளு மிருள நிழலுலவு

வளைய மகளிர்சிலை மதனை யரசிலிடு புகலி வருகுரிசில் வருகவே!
மலையின் மகளமுத கலச முலையருவி பருகு தமிழ்விரகன் வருகவே! 9

அகலு முதுபரவை பொதியு முலகுதனி லரிய பெருமைவர வருகவே
அரிய தரளவொளி பெருகு திருநிழலி லமரு பழகுவர வருகவே
மிகவு மமணர்பொரு மவையினவரவர்கள் விளியும் விரகுவர வருகவே
வெறிகொள் குவளையிதழ் நயன வனிதையுடன் விடையி
[67]லிறைவன் மகன் வருகவே
யிகலு மிருபுருவம் வளைய அளகமுட னிதய கமலமுகை புதையவா
யிதழி னிறமுடைய விளைய முலைகவர [68]மிடையு மிடைதுவள
எழுதொணு
மகளிர் [69]மகுணரொடு கலவி யமளிபுகு புகலி வருகுரிசில் வருகவே!
மலையின் மகளமுத கலச முலையருவி பருகு தமிழ்விரகன் வருகவே! 10

கலியின் வலிபொரு நினது புகழ்தவிர ஒருவர் புகழெனது செவிபுகா
கருத வரியவிரு சரண மலர்தவிர விதைய மொருநினைவு கருதிடா
வொலிகள் புகலிவலம் வருவ தொழியவினி யொருவ
ரிடவகையி னிடைசெலா
வுனது திருநிலையை யரியு மெனதுவிழி யொருவ [70]ருருவறிய
விழையெடா
பலிகொள் சமண்முடுகு நினது பெயர்தவிர வொருவர் பெயரெனது
மொழிபடா
படியி லுணவளையுமெனது தலையமரர் பலரு மிங்ஙன்வரினும் வளைவுரு
வலிய வெமைவினவி யடிமைகொள வமையுமறை முதலி வருகவே!
மலையின் மகளமுத கலச முலையருவி பருகு தமிழ்விரகன் வருகவே! 11

7. அம்புலிப் பருவம்

கிரியி பீலியு மருகர்தந் தலைகளும் பாய்களுஞ் [71]சுருள நாற்காதும்
வெப்பினுற் பட்டகண் கலக்கலமுங் கண்டருட்கண் சாத்தி
வரிகொள் வார்கழல் நின்குலத் தரசன்மேல் மன்னு கூனுடன் நீர்த்து
வாழ்வு தந்தன னென்பது முணர்ந்திலை மதியிலா யதுநிற்கப்
பரிய போர்வையாற் [72]சீர்வரந் தாங்கிய பவுத்தனைத் தலைவீழப்
பார்த்த கோடமின் றுன்னையும் பார்க்கிலேம் பார்க்கையிற்பணியுண்டோ

67. இறைவன் வர வருகவே 68. யிடையுமிடைதுவள
69. "மகிணரொடு" என்றிருப்பின் பொருந்தும் 70. ஒருவரறிவறிய
71. சுறுநாற் 72. சீபுரந்தாங்கிய

அரிய ஞயக [73]னிவனுட ஞடுதற் கம்புலி வருவாயே!
அமுது வாழ்வுதந் தருளினன் அழைத்தனன் அம்புலி வருவாயே! 1

வாவி தண்புனல் வளவயல் தழுவிய மருகல்மான் காதன்னில்
வணிகனைப் பணியெயிறு கொண்டு யிருண்டு மாண்டநாள் வணிகேசன்
றேவி புண்படு நெஞ்சுடன் படுதுயர் திருமலர்க்கண் சாற்றித்
திரிய வாருயிர் கொடுத்தவன் [74]இவன்றன் றிருவடியிணை விடாமே
கூவு தெண்டிரைக் கடைந்தனுள் நின்மொழிக் கோளினல் தமது ஆகம்
குறைந்த நாகங்கள் இரண்டும் வந்துஉன் உயிர்கூட உண்டுமிழ்ந்தாலும்
ஆவி யுன்னதாம் ஆகமும் உன்னதாம் அம்புலி வருவாயே!
அமுது வாழ்வுதந் தருளினன் அழைத்தனன் அம்புலி வருவாயே! 2

உரைசெய் கோல்பிடித் தூன்றுவா ரின்றியே ஓ த்தை வருகென்ருன்
உயர்ந்த வாண்பனை பெண்பனை யாகவும் ஒருவிசைக் கண்பார்த்தான்
றிரைசெய் வார்புனல் வைகையி னேரெதிர் செலத்தன் றிருவேடிட்டான்
செய்ய பாலகன் செய்யுமிச் சேதிகள் யாவற்குந் தெரியாது
விரைசெய் தாமரைக் கண்களா லுன்கறை மேனியைப் பார்த்தானேல்
நின்மேல் வரும்பழி கிடக்கநீ [75]தூய்மையாய் விளங்கலாம் விண்ணேருக்
கரச ஞமென விடுக்கினும் விடுக்கும் இன்றம்புலி வருவாயே!
அமுது வாழ்வுதந் தருளினன் அழைத்தனன் அம்புலி வருவாயே! 3

தழைத்த சோலைசூழ் மயிலையம் பதிதனில் சண்பகப் புதுக்கொம்பில்
சாரும் வல்விடந் தீண்டலு முயிர்விடுந் தத்தைதன் [76]திருக்கொம்பில்
குழைத்த சந்தகில் வளவிய குங்குமக் கொங்கை களுடன்செம்
பொற்குடத்தில் வந்தெழச் செந்தமிழ்த் திருவிசை கோத்தவ
னிவனுன்னை
இழைத்த வன்பணப் பாம்பின் வாயபட்டுநீ யாருயிர் இழந்தாலும்
இனிய செஞ்சொலால் உன்னையும் இங்ஙனே யாவரு மெதிர்கொள்ள
அழைக்க வல்லவ னுடனினி தாடுதற் கம்புலி வருவாயே!
அமுது வாழ்வுதந் தருளினன் அழைத்தனன் அம்புலி வருவாயே! 4

தேனலம் புதன்கொன்றை துன்றிய சடைத்தேவர்கள் மணவாளன்
செய்பொன் மேனியைப் பகிர்ந்துகொண் டிருந்தவுள் திருமுலைப்
பெருகும்பால்
ஞானமுண்டு தெண்டிரைப் புவிபரப்பினில் நடத்திய அறுபத்து
ஞலுவண்கலை நிரப்பிய முனியிவன் நரந்தை நாண்மலர் நாறும்

73. னுடனினிதாடு 74. இவன் திருவடி
75. தூய்மையாய் 76. றிருவென்பு

கோயில்கள்.

வித்துவான் வீ. சொக்கலிங்கம், தமிழாசிரியர்,
சரசுவதிமஹால்; தஞ்சாவூர்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது ஔவை வாக்கு. தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்கள், ஆலயங்களில் செய்த திருப்பணிகள் பல. அவைகள், தஞ்சை அரச ஆவணங்களினின்றும் தெரியக் கிடைக்கின்றன. அவ்வாவணங்களினின்றும் இதற்கு முன் நாணயங்களைப் பற்றியும், கப்பல் செய்திகளைப் பற்றியும் முதல் இரண்டு மோடிப்பலகணி வாயிலாக அறிந்தோம். வானளாவிய கோபுரத்தினைக் கொண்ட, இராச ராசேச்சுரத்தினைத் தஞ்சையில் நிறுவி, அழியாப் புகழ் படைத்தானொரு சோழன். அக்கோயிலிலும், பிற கோயில் களிலும் தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்கள் செய்த திருப்பணிகள் பல. இப்போது அம்மராத்திய மன்னர்கள் தொடர்பு கொண்டுள்ள கோயில்களைப் பற்றிய செய்திகளை, எமது நூலகத்தின் மோடிப் பகுதியிலுள்ள தமிழ் ஆவணங் களினின்றும் காண்போம்.

ஆவணம் எண் 13.

நெ. 11, ஸ்ரீ பிறகதெசுவர சுவாமி கோவிலில் அஷ்டொதர சிவலிங்க பிறத்தீஷ்டே சேயிததர்க்கும் மண்டலாபிஷெகம் உள்பட ஜாபீத்தா-1.

இவ்வாவணம் ஒரு சிறு துண்டுக் காகிதமாக உள்ளது. இது, அக்காலத்தே கையால் உருவாக்கப்பட்ட காகிதம். தேதி முதலியன குறிப்பிடவில்லை. அடுத்துள்ள ஆவணம் ஒரு குறிப்பேட்டுப் புத்தக உருவில் உளது. அதில் பல குறிப்புக்கள் உளவேனும் ஈண்டு கோயிலோடு தொடர்புடைய செய்திகளையே நோக்குவாம்.

ஆவணம் எண் 14.

11. ஸ்ரீ பிரகதீசுவர சுவாமி கோவிலில் 108 லிங்கம் சிவ பிறதிஷ்டே சேயிததர்க்கு மண்டலாபிஷேகம் சிலவான ஜாபீதா—(1)

30. தேவஸ்தானம் இலாகாவில் சருவமானியம் நிலம் வகையரு அனுபோகத்திலிருக்கப்பட்டதுகளின் ஜாபீதா—(2)

32. மகாராஜா அவர்களால் நெல்லு இனம் கொடுத்துவந்த ஜாபீதா—(3)

36. போஸ்லகுலம் ருஜாங்கம் துவக்கமுதல் சிவாஜி மகாராஜா வரைக்கும் பட்டம் ஆண்ட வருஷங்கள் கண்ட ஜாபீதா—(4)

37. சரபோசி மகாராஜாவுக்குப் பட்டம் ஆன தொடர்பு 1799-வருஷ முதல் ஐந்து வருஷத்திய ஆதாயம் சிலவு கணக்கு—(5)

38. அரண்மனை சேர்ந்த முகாஸா தோட்டம் வகையருங்களுக்கு கெவுர் மெண்டாருக்கு செலுத்தி வந்ததற்கு யேற்பட்ட கணக்கு 1226 பசலி முதல் 44 பசலி வரைக்கும்—(6)

39. ஸ்ரீ மகாராஜா சாயபு அவர்கள் சருவ மானியம் கொடுத்து சிகாசனத்து செய்து குடுப்பதில் உத்தியோகஸ்த்தர்கள் கையெழுத்து வைக்கப் பட்ட விவரங்களும் சிகா இன்னார் செய்தார்களென்பதும்—(7)

89. தேவஸ்தான ஜில்லாக்கா தொப்பரங்கட்டிப் பிள்ளையார் கோயில் அயிவேஜியில் சதாசிவருயர் கடன் வாங்கின சங்கதிக்காக திருவாதி முன்சீப்பு கோர்ட்டில் பிராது செய்த நடவடிக்கைகள்—(8)

90. நாகூர் தர்க்கா விசாரணை அரண்மனை உத்தியோகஸ்த்தர் செயீது வருகிற...........................அறியும் தஸ்தாவேசுகள்—(9)

யென வாரி

1. கட்டு மாவடி பட்டணம் அரண்மனையைச் சேர்ந்தது என்று ரூபிக்க ஆதரவுகள்—(10)

4. திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோயில் ஸர்வ மானிய சிகா நகல்கள்—(11)

11. பழனி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு நிலம் அளந்துவிட்ட ஆதிரவு—(12)

26. தஞ்சாவூர் கோட்டை அலங்கம் புருசுகள் இவ்வளவு. அதன்பேரில் ஏற்றப்பட்ட பீரங்கிகள் இவ்வளவு. ஷெ பீரங்கிகளுக்கு குண்டு இவ்வளவு. என்று நிஷ்கரிஷை செய்யப்பட்ட விபரமான ஜாபிதா ஏடு 19.—(13)

32. ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோவில் பூஜை நைவேத்தியம் ஆள் மாகாணம் வரவு சிலவு கணக்கும் வரும்படிகளும் கணக்கு 10 மாதத்தில் சிலவு ஆன கணக்கும்.—(14)

43. மதுரை ஸ்ரீ மீனுட்சியம்மனுக்கு திருவாசலுக்கு தங்கமுலாம் செய்து கொடுத்த ஆதாயம் சிலவு கணக்கு—(15)

59. திருவையாறு, சப்தஸ்தானம் சுவாமி கண்டு ஊரில் வரும்போது பானக பூஜை சிலவு ஜாபிதா—(16).

வருண ஜபம், ருத்ராபிஷேகம் ஜாபிதாக்கள்—(17)

ஸ்ரீ ரெங்கநாத சுவாமிக்கு அரண்மனையிலிருந்து நடப்பிவித்து வருகிற அகண்ட தீபம், துளசி அர்ச்சனை, நைவேத்தியம் இவைகளுக்கு சர்க்கீல் பாவாஜி ராமாஜி பண்டிதர் செய்த ஏற்பாடு—(18)

53. ஸ்ரீ சரபோஜி மகாராஜா அவர்களுக்கு 1798-ஸு பட்டாபிஷேக மான முதல் கொண்டு 1831-ஸு வரைக்கும் அரண்மனையில் கல்யாணம் சுப காரியம் ஆனதற்கு ஜாபிதா—(19)

மேற்கூறிய ஆவணத்தில், இன்னும் பல செய்திகளின் ஜாபிதாக்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் பெரிதும், சிதைந்து இருக் கின்றன. முதலாவதாகச் சொல்லப்பட்ட பிரகதீசுவர சுவாமி கோயிலில் நூற் றெட்டு சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்த செய்தியால், மராத்திய மன்னர்களே இதனைச் செய்தனர் என்பது புலனாகின்றது. "ஜாபிதா" என்றிருப்பதால் சிலவு களின் பட்டியல் இருத்தல்வேண்டும். அது கிடைப்பின் வெளியிடப்படும். இவ் வாவணம், பட்டியல்(ஜாபிதாக்)களின் குறிப்புகள் கொண்டதாகும். மேல் ஆவணத்தில் 36-ம் எண் கொடுக்கப்பட்டுள்ளதில் "போஸ்ல குலம் ருசாங்கம்" எனப்படும் போன்ஸ்லே வம்ச மன்னர்களின் ஆட்சிக் குறிப்புகளின் பட்டியல் கிடைப்பினும் நலம் பயக்கும்.

89-ஆம் எண்ணில் குறிப்பிடப்பட்ட தொப்பரங்கட்டிப் பிள்ளையார் என்ற சொல் 'தொப்பைக்கு ஆரங்கேட்ட பிள்ளையார்' என்பதன் திரிபாகும். இவர் தஞ்சை நாணயக்காரச் செட்டித்தெருவின் கிழக்கே உயர்ந்த இடத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார். இவரைப்பற்றிய ஒரு சுவையான செவி வழிச்செய்தி யொன்றுண்டு. அது வருமாறு.

தஞ்சைப் பெரியகோயிலில் பிரகதீசுவரரைச் சமைக்க, நருமதை நதி தீரத்திலிருந்து கல் கொண்டு வந்தார்கள். வரும்போது, தஞ்சைக்கு வடக்கே கிட்டத்தட்ட ஒரு கல் தொலைவிலுள்ள விண்ணாற்றங்கரைப் பகுதி அடையவே அக்கல் அதற்குமேல் நகராமல் ஓரிடத்தில் தங்கிவிட்டது. விசனமுற்ற மன்னன் அருகிலிருந்த பிள்ளையாரை வேண்டினான். பிள்ளையார், அக்கல்லினைப் பெரிய கோயில் இருக்குமிடத்திற்குக் கொண்டுவந்து வைத்தார். மகிழ்ந்த மன்னன் பிள்ளையாரை வணங்கி, "எனது நன்றிக்கறிகுறியாக யாது செய்தல் வேண்டும்" என்று வினவ, அதற்குப் பிள்ளையார் "என் தொப்பைக்கு ஒரு ஆரம் வேண்டும்" என்று வேடிக்கையாகக் கூறினாராம். அரசனும் அவ்வாறே நல்கி அவரை உயர்ந்ததோர் நல்லிடத்திலமைத்து, விமானங்கட்டி வழிபட்டான் என்பது.

"யெனவாரி" என்ற தலைப்பின் கீழுள்ள பகுதியில் 4-வது எண்ணில் குறிப்பிட்ட செய்தியால் திருவாரூர் தியாகேசப் பெருமானுக்கு இறையிலியாகச்

சில (நிலங்கள் முதலிய) வைகளைக் கொடுத்திருப்பதாகவும் 11-வது எண்ணில் குடுப்பிட்ட செய்தியால், பழனி பாலதண்டாயுதபாணிக்கு, நிலம் அளந்துவிட்ட செய்தியும் தெரிகின்றது. இவைகளால் மராத்திய மன்னர்கள் சைவக் கடவுளர் மீது மிகுதியான பற்று வைத்திருந்தனர் என்பது பெறப்படுகின்றது. 26-ஆம் எண்ணில் குறிக்கப்பட்ட செய்தியால் மராத்திய மன்னர்கள் பீரங்கிகளை மிகுதியான அளவில் பயன்படுத்தி வந்தனர் என்பது தெரியவருகின்றது. தற்போது "தாசி மேடு" என வழங்கும், தஞ்சை கீழக்கோட்டை வாசல் அண்மையிலுள்ள, கீழ அலங்கத்தில் கிட்டத்தட்ட 30 அடி உயரத்தின்மேல் ஒரு பெரிய பீரங்கி உள்ளது அதன் நீளம், கிட்டத்தட்ட 20 அடியும், உள்விட்டம் 2 அடியும், வெளிவிட்டம் $3\frac{2}{3}$ அடியுமாக உள்ளது. ஆகவே, அப்பீரங்கியின் இரும்பு கிட்டத்தட்ட 115 கன அடியாகும்.

32-ம் எண்ணில் குறிப்பிட்ட காமாட்சி அம்பாள், மேல வீதியிலுள்ள பங்காரு காமாட்சி அம்மனாக இருக்கலாம். 43-ஆம் எண்ணால் மதுரையில் வீற்றிருக்கும் அங்கயற்கண்ணியாகிய மீனும்பிகையின் திருவாசலுக்குத் தங்க முலாம் செய்து கொடுத்த செய்தி புலனாகின்றது. 59-ஆம் எண்ணில் குறிப்பிட்ட 'சப்த ஸ்தானம்' என்பது ஏழு சிறப்பிடங்கள். அவையாவன: திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம். என்பன. ஆண்டுதோறும், சித்திரைத் திங்கள் விசாக விண்மீன் கூடிய நன்னாளில், திருவையாற்றினின்றும், நந்திதேவர், அறம் வளர்த்த நாயகியுடன் ஐயாறப்பர், ஆகியோர் புறப்பட்டு, ஒவ்வோரூர் சுவாமியும் எதிர்கொண்டழைக்கப்பெற்று, ஏழூரும் சுற்றி வருதல் வழக்கம். மக்கள் பக்தியோடு திரளாகச் சுவாமியோடு பின் செல்வர். தேவாரம் பாடிக்கொண்டும் வேதமோதிக்கொண்டும் இறைவனை வழிபட்டுக்கொண்டே சென்று ஏழூர் விழாக் கொண்டாடி ஐயாறடைவர்.

சமய வேறுபாடு சிறிதும் கொள்ளாத மராத்திய மன்னர்கள், பிற மதங்களையும் போற்றியுள்ளனர். வைணவக் கடவுளான திருவரங்கம் அரங்கநாதரின் அழகில் ஈடுபட்டு அப்பெருமாளுக்கு அகண்ட தீபம் ஏற்றி வைத்தனர். அகண்ட தீபம் என்பது அணையாத விளக்காகும். தஞ்சை மன்னர் சத்திரபதி சரபோசி அவர்கள் மகுடம் புனைந்த ஆண்டு கி. பி. 1798 என்பதற்கு இதன் 53-வது எண்ணில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தியே சான்றாகும்.

ஆவணம் எண் 15.

ஸ்ரீ ராமசாமி கோயில் தேவஸ்தானம். கீழவாசல் ஸ்ரீ கோதண்ட ராமசாமி கோயிலுக்கு நிலம் வா கி ரி டு ந்ததில் 1876-ஆம் ஸ்ரீ டிசம்பர்-மீ வரைக்கு சருப்பு சேஷப்பய்ய த்திலிருந்து தீர்த்து வாங்கிக்கொண்டு கணக்கில் வரவு செலவுபோக பாக்கி ரூ. 261—6—0

இவ்வாவணத்தின் இது முதலாக ஒன்பது பக்கங்களில் நெல் வரவு சிலவுச் செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன. இடையிலுள்ள பக்கங்கள் மிகச் சிதைந்து காணப்படுகின்றன. குத்தகை நெல் இத்தனை கலத்திற்காக இத்தனை கலம் வரவு வந்ததென்ற விபரமும், மேற்படிக்கு வண்டிச்சத்தம், நிலவரி முதலான சிலவுகள் எழுதப்பட்டிருப்பதோடு, மேற்கூறிய பெருமாளுக்கு, ஆண்டுதோறும் நடந்த பூசை நைவேத்தியத்துக்காக ஆன சிலவு இவ்வளவு என்றும் எழுதப் பட்டிருக்கின்றது. சான்றுக:—

(1) பூஜை நைவேத்தியத்துக்காக 1876-ம் ஹூ மே-மீ முதல் 1877-ஆம் ஹூ ஜனவரி மீ க. ரூ 13—6—0

(2) (18)75 ஹூ நவர்பர்-மீ முதல் (18)76 ஹூ யெப்பிறல்-மீ 30-க்கு நெவெத்தியம் வகைரு சிலவுக்காக ரூ. 8—14—0 என்றுளது. வருமானத்தில் மிகக் குறைந்த அளவுதான் பெருமாளுக்குப் பயன்பட்டு வந்திருக்கின்றதுபோலும்.

கீழவாசல், ஸ்ரீ கோதண்டராமசுவாமி என்று குறிப்பிட்டிருப்பதால், இப்பெருமாள் தஞ்சை, கீழக்கோட்டை வாயிலுக்கு மேற்கே எழுந்தருளியுள்ள யோக நரசிம்மப் பெருமாள் கோயிலுக்கு எதிரே, அப்பெருமாளை நோக்கிய வண்ணம் வடக்குநோக்கி எழுந்தருளியுள்ளவராவார். கருவறையில் மேற்கு நோக்கிய வண்ணம் (முதலில்) கூப்பிய கரங்களோடு அநுமனும், அடுத்து சீதாப் பிராட்டியும், அடுத்து அம்பறாத் தூணியுடனும், வில்லுடனும், கம்பீரத் தோற்றத் துடனும் விளங்கும் இராமபிரானும், அவ்வாறே இலக்குவனும், நின்ற திருக் கோலத்தோடு எழுந்தருளியுள்ளார்கள். இவர்கட்கு இக்கருவறை உருவங்களைப் போன்றே எழுந்தருளுருவங்களும், செப்புப் பிரதிமங்களாக இருக்கின்றன. தற்போது நாடோறும் பூசை நிவேதனங்கள் நடைபெற்று வருகின்றன. கருவறை யின் முன் அறையில் ஒரு மாடத்தில் மேற்குநோக்கிய வண்ணம் (மற்றொரு) ஆஞ்ச நேயரும், அவருக்கு எதிர்மாடத்தில் கிழக்கு நோக்கிய வண்ணம் கருடாழ்வாரும் காட்சியளிக்கின்றனர். கோயில் மிகச் சிறிய அளவில் இருப்பினும், அழகுபெற அமைந்துள்ளது. கடவுளரும் மிக மிக அழகான உருவில் காட்சியளிக்கின்றனர். பத்தியில்லாதவர்களுக்குக் கூட இக்கடவுளரைக் கண்டால் பக்தி தானாகவே வந்துவிடும். ஆனால் யாரும் இப்பெருமாளைக் காண்பதுதானில்லை. மேலும் இங்கு ஒரு சிறப்பு உண்டு. இப்பெருமாள் கோவிலின் வாசலுக்கு எதிரே உள்ள தெருவில் மேற்கு நோக்கி நின்று கைகூப்பி வணங்கினால், ஒரே சமயத்தில் மூன்று கடவுளரை வணங்கலாம். ஒருவர் மேற்குறிப்பிட்ட கோதண்டராமசாமிப் பெருமாள்; மற்றொருவர் அவர் எதிரிலிருப்பவர், யோக நரசிம்மப் பெருமாள்; மூன்றுமவர் வணங்குபவருக்கு நேர் எதிரே சற்று தொலைவில், கீழ வீதியின் மேல் வரிசையில் எழுந்தருளியுள்ள இராம தூதரான ஆஞ்சநேயர். இம்மூவருமே கருணை பாலிக்கும் கடவுளர், மூவருக்கும் தனித்

தனியே மூன்று கும்பிடு போட மனிதனுக்கு நேரமிருக்காது என்ற காரணத்தாலோ என்னவோ, கடவுளரே மனிதர்மீது கருணை கூர்ந்து, மூவருக்கும் ஒரு கும்பிடாவது போடட்டும் என்று வீற்றிருக்கின்றார்கள் போலும்.

ஆவணம் எண் 16.

ஸ்ரீ மகாருசா சாயேபு அவர்கள் திவானத்துக்கு திருவாதி தாலூகா வல்லத்திலிருக்கும் யிஞ்சினீர் சிதம்பறபிள்ளை குமாறன் சிவசுப்பிறமணியன் மிகுந்த வணக்கத்துடனே தெண்டநிட்டு எழுதிக்கொண்ட மனு என்னவென்றால்.

யென் தகப்பனார் 1775-ம் ஹு முதல் கும்பினியில் சவுதறன் டிவிஷன் இஞ்சினீற் டிபாற்ட்டிமெண்டில் கணக்கு உத்தியோகமாயிருக்கும்போது இந்த கோட்டை வெளியில் னந்தவனம் தண்ணீர்ப் பந்தல், கொள்ளுகஞ்சிச் சாவடி கெணர்கள், பசுக்கள் தண்ணீர் குடிக்கிற பெரி(ய) சாயி 3 தொட்டியும் கட்டி கோட்டைக்குள் அய்யங்குளம் வடகறையில் ஒரு கோவிலும் கட்டி பின்னும் சில தர்மங்களும், வெகு பணங்களைச் சிலவழித்து யென் தகப்பனார் தர்மம் செயிது வந்தும் ஷெ காறிஷன் யெந்தயிடத்திலிருந்தாலும் அவடங்களிலிருந்தும் சிலவுகளுக்குக் குடுத்தனுப்பியும், யிந்த அறமனை யிலாகா மகமை அயிவேசியில் குடுத்துவந்த திருவிளக்கெண்ணையும் வாங்கி ஷெ கோவிலுக்கு திருவிளக்கும் வைத்து பூசை நெயிவேத்தியமும் நடந்து வருகையில் யென் தகப்பனார் யெறந்துபோனார். பிறகு நான் இந்த இலாகா விளாரு வகையரு அவால் உத்தியோகத்திலிருக்கையில் அறமனைக்கி ரெம்பவும் கூடுதல்களும் பழ முதல் பாக்கிகளும் வசூல் செயிது யெனக்கு வந்த சம்பளத்தை கொண்டும் யென் தம்பி யேகனயகம் சபையில் ஜவாபு நவிஷ் அலுவலிலிருக்கும்போது அவனுக்கு வந்த சம்பளத்தைக்கொண்டும் நாங்களும் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு ஷெ கோவில் பூசைக்கு குடுத்து வரும்போது மேலெழுதியபடி யென் தகப்பனாருலுண்டு பண்ணின ஷெ கோட்டை வெளி தர்மங்களை இப்போ அரமனையாறவர்கள் நீலகிறிப்பேட்டையென்று உண்டு பண்ணி யிருக்குறத்தில் பெலவந்தமாயி செத்துக்கொண்டதுமல்லாமல் முத்திறை சபையில் வெகு நாளாயி யென் தம்பி ஜவாபு நவிஷ் அலுவலிலிருந்து பாத்து வறயில் அவன் காயலா யிருக்கையில் மத்தியஸ்த்தர் உத்திரவுப்படி னன் ஒரு வருஷம் வரையில் மேற்படி ஜவாபு நவிஷ் அலுவலைப் பார்த்து வந்தும், யென் தம்பி யெறந்துபோன பிறகும் நானிருந்தும் அலுவல் பாத்து வந்த உண்மையும் யென் யேராலந்த அலுவலாக வேணுமென்று ஷெ மத்தியஸ்தர் சமூகத்துக்கு பத்திறமெழுதி யிருந்தும் இது வரையில் யென்பேராலந்த அலுவலாகாத்துனலும் கோட்டைக்குள்ளிருந்த ஷெ கோவில் சீரணிச்சுப்போனத்தை அறமனையார் கிருபையிருலேனன் பல உபயங்களாயி சீறண உத்தாறணம் பண்ணிவிச்சு வெகு குடும்பங்களுடனே கஷ்டப்

படுகுறதுமல்லாமல் முன் யென் தகப்பனர் கும்பினி உத்தியோகத்தில் வெகு நாளிலிருந்து வெகு பிரயாசைப்பட்டு வெகு பணம் சிலவழித்துச் செயித ஷெ தர்மங்களை நான் செய்யவேணுமென்கிற விசுவாசம் யெனக்கு றெம்பவும் இருப்பதால் இதுகளையெல்லாம் வச்சுத் தாங்கும்படியாயும் ஷெ கோவில் பூசை நடந்து வரும்படியாயும், அநேகம் தேவாலயம் பிற்ம லையங்களையும் சவரக்ஷணை செயிது அநேகம் குடும்பங்களையும் றெட்சித்து வருகிற அறமனையாறவர்கள் யெனக்குத் தகுந்த அலுவல் செயிது குடுத்து றெட்சிக்கவேணுமென்றும் முன் நாளது-ஷ யெப்பிறல் மீ" ௨உ யில் சமூகத்தில் யாதி குடுத்திருக்குறேன். அதுக்கு யிதுவரையில் யாதொரு உத்திறவு மாகாத்துனலும் யிப்படிக்கி அறமனையாறவர்கள் யேழை யாகிய னன் கொடுத்த யாதிக்கு யாதொரு உத்திறவு குடாமலிருந்தால் ஷெ தர்மங்களும் ஷெ கோவில் பூசை முதலானதும் யென் குடும்ப சவறக்ஷசனையும் யெப்படி நிறுவாகிக்கலாம். ஆகையால் அறமனையாறவர்கள் கிறுபை செயிதும், யேப்பிறல் மீ" ௨உ யில் னன் சமூகத்தில் குடுத்திருக்குற யாதியையும், யிந்த மனுவையும் பாத்து ஷெ தர்மங்கள் நடக்கும்படியாயும், யென் தம்பியினுடைய சமுசாறங்களுடனே நான் கஷ்டப்படாமலிருக்கும்படிக்கி யெனக்கு தகுந்த சீவனம் செயிது குடுத்து றெச்சிக்கவேணுமென்றும் மிகவும் மன்றுடி கெட்டுக் கொள்ளுதுறென். வேணும். விண்ணப்பம் ஸ்ரீஅா ஜூலை-ம் ஷ.

மேன் மீ" ௨உ சிவசுப்பிறமணியன் கையெழுத்து

இவ்வாவணத்தினல் 1775-ம் ஆண்டு ஆங்கிலேயர் அலுவலகத்தில் கணக்கராகவிருந்த பொறியாளர் திரு. சிதம்பரம் பிள்ளை அவர்கள், தஞ்சைப் பகுதியில் நந்தவனங்களை யமைத்தும், தண்ணீர்ப் பந்தல்கள் ஏற்படுத்தியும், கொள்ளுக் கஞ்சிச் சாவடிகளைத் தோற்றுவித்தும், கிணறுகளை வெட்டுவித்தும், பசுக்கள் நீரருந்தப் பெரிதாக மூன்று தொட்டிகளைக் கட்டுவித்தும், அறம் புரிந்து வந்திருக்கிறர் என்பதும், மேலும் சில பல அறங்கள் செய்ததோடு தஞ்சை, மேலவீதியில் உள்ள ஐயன் குளத்தின் வடகரையில் ஒரு கோயிலும் கட்டியிருக்கிறர் என்பதும் தெரியவருகின்றது. (ஐயன்குளம் என்பதின் பெயர்க்காரணமாவது :— தஞ்சையை ஆண்ட சேவப்ப நாயக்கர், அச்சுதப்ப நாயக்கர், ரகுநாத நாயக்கர், இவர்களின் காலத்தில் கோவிந்த தீட்சிதர் எனும் கோவிந்த ஐயர் அமைச்சராகச் சுமார் 50 ஆண்டுகட்கு மேல் பணியாற்றிப் பல நன்மைகளைச் செய்துவந்தார். பலருக்கும் பல நன்மைகளைச் செய்து வந்தார். அவரால் நன்மையடைந்தவர்கள் அவர்தம் புகழை நிலைநாட்ட, அவருடைய பெயரை ஊர்களுக்கும் தெருக்களுக்கும் குளங்களுக்கும் இட்டழைத்தனர். கோவிந்தபுரம், கோவிந்தகுடி, ஐயன் பேட்டை, ஐயன்கடைத்தெரு, ஐயன்குளம் என்பன அவ்வாறு இடப்பட்ட பெயர்களாகும் என்பர். அவற்றில் ஒன்றே ஐயன் குளமாகும்.) ஐயன்குளத்தின் வடகரையில் தற்போது கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளவர் அங்கயற்கண்ணி

அருகிருக்கும் சோமசுந்தரர் இக்கோயிலேயே பொறியாளர் (எஞ்சினீயர்), திரு. சிதம்பரம் பிள்ளை அவர்கள் முன்புகட்டியிருத்தல் வேண்டும் என்று எண்ணுதற்கிடமிருக்கின்றது.

காலப்போக்கில் இக்கோயில் பற்றிக் கூறப்படும் செவிவழிச் செய்தி யாவது :—

சற்றேறக்குறைய ஒரு நூற்றைம்பது ஆண்டுகட்கு முன், தற்போதுள்ள கோவிலுக்கு எதிரே சற்று தொலைவில் திருமதி. பார்வதியம்மாள் என்றொரு அம்மையார் தமது தங்கையுடன் வாழ்ந்து வந்தார்கள். இவ்வம்மையார் காசி யாத்திரை மேற்கொண்டு, காசி சென்று கங்கையில் மூழ்கி ஒரு லிங்கத்தினை எடுத்தார்கள். அதனைத் தஞ்சையில் வைத்துக் கோயில் கட்டி வழிபட எண்ணங் கொண்டபோது, தங்கைக்கும் தனக்கும் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. தங்கை யுடன் பார்வதியம்மாள் தஞ்சை வந்தார்கள். அதுகலை, இப்போது கோயில் உள்ள இடம் (இதற்கு முன் கோயில் இருந்த சுவடே தெரியாவண்ணம்) பாழ் பட்டுக் கிடந்தது. அவ்விடத்தினை, அந்த அம்மையார் ரூ. 200/- கொடுத்து விலைக்கு வாங்கினார்கள். அவ்விடத்தில் காசியினின்றும் கொண்டுவந்த இலிங்கத்தினை வைத்துக்கோயில் கட்ட எண்ணினார்கள். அதன்படி, முதலில் மதிற்சுவர் எடுக்க அகழ்ந்தபோது, தரைக்கு அடியில் ஒரு பள்ளத்தில், இப்போதுள்ள மீனாட்சி, தண்டாயுதபாணி, பிள்ளையார், தட்சிணாமூர்த்தி, சண்டேசுரர் முதலான கற்சிலை யுருவங்கள் (இலிங்கம் தவிர) மணலால் மூடப் பட்டுக் கிடந்தவை தெரிந்தது. அம்மையாரின் கனவு நனவாகவே, பெருமகிழ் வோடு நிலத்தினின்றும் வெளிப்பட்ட மீனாட்சிக்குத் தான் கொண்டுவந்த இலிங்கத்தை சொக்கலிங்கமாக்கி, இவர்களுக்குக் கோயிலெடுத்து, ஆங்காங்கு முறைப்படி, பரிவாரத் தெய்வங்களையும் நிறுவிக் குடமுழுக்குச் செய்தார்கள். கோயிலெடுத்ததோடமையாது, இக்கோயில் என்றும் நின்று ஒளிரத் தன்னிடம் எஞ்சியுள்ள ஒரு சிறு தொகையினை மூலதனமாக்கி, அதனைக்கொண்டு இக் கோயிலைக் கண்காணிக்கத் தஞ்சையில் நல்லவர்களாக இருவரை நியமித்து விட்டு, இவ்வம்மையார் இம்மீனாட்சி சுந்தரேசுரருடைய திருவடிநிழலையடைந் தார்கள்.

சிலகாலஞ்செல்ல, இயற்கையின் சூழலினால் மின் தாக்குதலுக்காளாய இக் கோயில், தன்னுடைய உருவிழந்தது. பின்னர், முன்பு நியமிக்கப்பட்டவர்களின் வாரிசுகள் முன்னின்று, இக்கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கு செய்தனர். * (மூன்றாவதாகக்) குடமுழுக்கச் செய்யப்பட்ட இக்கோயில் சிலகாலஞ்செல்ல,

* நமது ஆவணத்தின்படி முதலாவதாக சிதம்பரம்பிள்ளை அவர்கள் கட்டியது. இரண்டாவதாகப் பார்வதி அம்மாள் அவர்கள் கட்டியது. மூன்றாவதாக பாது காவலர்களின் வாரிசுகள் செய்தது. ஆகவே இது மூன்றாவது எனக் குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

(வளரும்)

தன்வந்திரி வைத்யம்

(இரண்டாம் பாகம்)

தஞ்சாவூர் ஸரஸ்வதி மஹால் நூல் நிலையத்தின்
முன்னாள் வைத்ய ஆராய்ச்சியாளர்
Dr. S. வெங்கடராஜன், L. I. M., (Regd.) அவர்களால்
பதிப்பிக்கப்பெற்று

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி ஸரஸ்வதி மஹால்
நூல் நிலைய நிர்வாகக் குழுவினருக்காக
கௌரவக் காரியதரிசி
ஸ்ரீ O. A. நாராயணஸ்வாமி, B. A., B. L., அவர்களால்

❀

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ் அச்சகத்தில் அச்சிட்டு
வெளியிடப்பட்டது.

சகம் 1888
கி. பி. 1966

விலை ரூ. 3

PREFACE

